**7105**

Register Number | | | | | |

**Part III**

# உளவியல் / PSYCHOLOGY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

குறிப்பு : i) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண்.

I. கோடிட்ட இடங்களை நிரப்புக : 15 × 1 = 15

1. கற்றல் என்பது ............................ வாயிலாக ஏற்பட்ட நடத்தை மாறுதலாகும்.

2. மொழி சார்ந்த நடத்தை அதிகமாகப் பயன்படுத்தப்படும் கற்றல் ............................ எனப்படுகிறது.

3. மனிதக்கற்றலில் ............................, மொழியும் பயன்படுத்தப் படுகின்றன.

4. மாணவனுக்குள்ள திறமை இந்த ............................ முறை மூலம் சோதிக்கப்படுகிறது.

5. நினைவு ஒரு செய்தியை விரைவாகவும், ............................ கற்க உதவுகிறது.

6. மறதி, நினைவின் ............................ செயல் முறையாகும்.

7. ............................ நினைவிலிருத்தலில் செல்வாக்குக் கொண்டுள்ளது.

8. சிந்தித்தல் ஒரு ............................ கூடிய நடவடிக்கை.

9. பிரச்சினை தீர்த்தல் ............................ செலுத்தப்பட்ட ஓர் நடவடிக்கையாகும்.

10. கனவுகள் ஒருவனின் ............................ எனக் கருதப்படுகிறது.

11. ............................ என்பவரும், வோல்பெர்ட் என்பவரும் கனவுகளின் பல்வேறு தன்மைகளை பரிசோதனை மூலம் ஆராய்ந்துள்ளனர்.

[ Turn over

12. ........................... என்பவர் அச்சம் ஓர் கற்கப்பட்ட துலங்கல் என்று கூறுகிறார்.

13. கருத்துரை உளப்புலன் காட்சி சோதனை ........................... அட்டைப் படங்களைக் கொண்டது.

14. சந்தர்ப்பச் சோதனை M.A. மே மற்றும் ........................... என்பவரால் தயாரிக்கப்பட்ட சோதனையாகும்.

15. குழந்தைகளிடம் சரியான ........................... அன்பும் செலுத்தப்பட வேண்டும்.

II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 15 × 1 = 15

16. கோஃலரின் பரிசோதனையில் பயன்படுத்தப்பட்ட விலங்கு

அ) மனிதக்குரங்கு

ஆ) நாய்

இ) பூனை

ஈ) புறா.

17. முயன்றும், பிழைசெய்தும் கற்றலை உருவாக்கியவர்

அ) தார்ண்டைக்

ஆ) கோஃலர்

இ) பாவ்லவ்

ஈ) ஸ்கின்னர்.

18. ஊக்குவித்த மறதியின் மற்றொரு பெயர்

அ) தெரிந்தெடுத்த மறதி

ஆ) வெளிநிலை மறதி

இ) பிறழ்வு நிலை மறதி

ஈ) உள்நிலை மறதி.

19. நினைவாற்றல் இல்லாது போனால் மனிதனுக்கு அவனின் அனுபவத்தாலும், நுண்ணறிவினாலும் பயன் ஏதுமில்லை எனக் கூறியவர்

அ) பீனே

ஆ) தாரண்டைக்

இ) ஜெரார்டு

ஈ) உட்வொர்த்.

20. நினைவின் வகைகளாவன

அ) 3

ஆ) 4

இ) 5

ஈ) 2.

21. ''சிந்தித்தல் உள்ளுறையும் பிரச்சினைத் தீர்க்கும் நடத்தை'' எனக் கூறியவர்

அ) காரட்

ஆ) மாஹ்சின்

இ) ஜில்மர்

ஈ) வாட்சன்.

22. கருத்துக்கோள்கைளைப் பயன்படுத்திச் சிந்திப்பதற்கான திறமையை ஆராய்வதற்கான ஒரு சோதனையை உருவாக்கியவர்

அ) இ.எல். தாரண்டைக்

ஆ) பி.எப். ஸ்கின்னர்

இ) ஐ.எஸ். விகோட்ஸ்கி

ஈ) இ.பி. டிச்னர்.

23. 'கனவுகள் நம் தூக்கத்தின் பாதுகாப்பாளர்களாக இருக்கின்றன' - எனக் கூறியவர் யார் ?

அ) தாரண்டைக்

ஆ) மர்பி

இ) சிக்மண்ட் ப்ராய்டு

ஈ) பீனே.

24. கனவின் காரணங்கள்

அ) இரண்டு

ஆ) மூன்று

இ) நான்கு

ஈ) ஐந்து.

25. அச்சம், கோபம் மற்றும் அன்பு ஆகிய மூன்றும் முதல்நிலை மனவெழுச்சிகள் எனும் கருத்தினைக் கொண்டவர்

அ) இ.எல். தாரண்டைக்

ஆ) வில்லியம் மெக்டூகல்

இ) ஜே.பி. வாட்சன்

ஈ) பி.எப். ஸ்கின்னர்.

26. ஆளுமையினை புறமுக, இருமுக மற்றும் அகமுக ஆளுமை என மூன்றாக வகைப்படுத்தியவர்

அ) ஜேம்ஸ்

ஆ) ப்ராய்டு

இ) யூங்

ஈ) கிரஷ்மர்.

27. ஆல்போர்ட்டால் உருவாக்கப்பட்ட சோதனை

அ) புறத்தெறி சோதனை

ஆ) கருத்துக்கோள் உருவாதல் ஆய்வு சோதனை

இ) சொல்-இயைபு சோதனை

ஈ) அதிகாரம் - பணிதல் எதிர்வினை சோதனை.

28. சமூக நாடகம் என்பது

அ) கற்பனைத் திறன் சோதனை

ஆ) சிந்தனைத் திறன் சோதனை

இ) ஆளுமை சோதனை

ஈ) மனவெழுச்சி சோதனை.

29. வாக்கியத்தை முடித்தல் சோதனை என்பது

அ) சிந்தனை பற்றியது

ஆ) கற்பனை பற்றியது

இ) மனவெழுச்சி பற்றியது

ஈ) ஆளுமை பற்றியது.

30. ''வளமான சமுதாயத்தில் வாழும் ஆரோக்கியமான உடலிலுள்ள நலமுள்ள மனம்'' என்பதை குறிக்கோளாகக் கொண்டு உலக ஆரோக்கிய நிறுவனம் செயல்படுவது

அ) உடல் ஆரோக்கியத்தை பாதுகாத்தல்

ஆ) உளச் சமூக சார்புடைய பாதுகாப்பு முறைகள்

இ) சமூக-பண்பாடு சார்ந்த பாதுகாப்பு முறைகள்

ஈ) மேற்கூறியவற்றில் ஏதுமில்லை.

## பகுதி - ஆ

குறிப்பு : i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) விடைகள் சுருக்கமாகவும் துல்லியமாகவும், நான்கு வாக்கியங்களுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று மதிப்பெண்கள். $20 \times 3 = 60$

31. கற்றலுக்கு மர்பி கூறிய வரையறை யாது ?

32. பொதுமையாக்கல் என்றால் என்ன ?

33. பகுதியான வலிமையூட்டல் என்பது யாது ?

34. நினைவு கூர்தல் என்றால் என்ன ?

35. L.I.R. என்பது யாது ?

36. மறதி பற்றி நார்மேன் கருத்து யாது ?

37. மறதியின் தன்மை ஏதேனும் மூன்று பற்றிக் குறிப்பிடுக.

38. சிந்தனையின் பண்புக் கூறுகள் யாவை ?

39. சிந்தித்தல் வரையறை யாது ?

40. மொழியின் இரு வகைப் பொருட்கள் யாவை ?

41. மி.பா.க. ( E.O.G. ) என்பது யாது ?

42. மீத்தெளி பிம்பங்கள் என்றால் என்ன ?

43. மனவெழுச்சி என்றால் என்ன ?

44. பொய் நிர்மானி பயன் யாது ?

45. சினத்தின் வரையறை யாது ?

46. கிலிகளின் வகைகள் மூன்று குறிப்பிடுக.

47. அக்ரோமெகாலி என்பது யாது ?

48. வில்லியம் ஜேம்ஸின் ஆளுமை பாகுபாடு யாது ?

49. சந்தர்ப்ப சோதனைகள் யாவரால் தயாரிக்கப்பட்டது ?

50. மனநலம் என்பது யாது ?

## பகுதி - இ

*குறிப்பு :* i) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் குறிப்பாகவும், 15 வாக்கியங்களுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் 10 மதிப்பெண்கள். $5 \times 10 = 50$

51. நடத்தையை வடிவாக்குதல் விவரி.

52. நினைவின் வகைகளில் ஏதேனும் இரண்டு பற்றி விவரி.

53. ஊக்குவித்த மறதி விளக்குக.

54. பிரச்சினை தீர்த்தலின் படிகள் பற்றி விளக்குக.

55. பின்பிம்பங்கள் பற்றி விவரி.

56. கானன்-பார்டு கோட்பாடு விளக்குக.

57. கிரஷ்மரின் ஆளுமை வகைகளை விவரி.

58. உளக்கோளாறுகளைத் தடுக்கும் மூன்றாம் முறையை விளக்குக.

## பகுதி - ஈ

*குறிப்பு :* i) எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளி.

ii) ஒவ்வொரு விடையும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் இருபது மதிப்பெண்கள். $3 \times 20 = 60$

59. கற்றலின் வகைகளை விளக்குக.

60. நினைவின் பண்புக் கூறுகள் விளக்குக.

61. கருத்துக்கோள்கள் பற்றி விளக்குக.

62. கனவுகள் பற்றி விவரி.

63. புறத்தெறி சோதனைகளில் ஏதேனும் மூன்று பற்றி விளக்குக.